Registerd as a Newspaper in Ceylon

★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

[illegible] எண். 49 | மலர் 18
[illegible] 689 | இதழ் 174

National Tamil Daily | தேசிய தினசரி

[illegible] ஆடி 19 ஜ அவ் 8 சனிக்கிழமை (3-8-68)




# சிகரட் விலை ஒரு சதம் உயர்வு; சாராயம் (களுத்துறை) போத். ரூ. 10

## பப்ளின், பப்ரிக் ஜவுளி விலைகள் குறையும்

## குறைந்த வருமானமுள்ளவர்க்கு வருமான வரியில் சலுகை

கொழும்பு, வெள்ளி

ஒருபோத்தல் தென்னை வடிசாராயத்தின் விலை இனிபத்து ரூபாய். சிகரட், பீடி, சுருட்டு ஆகியவைகளின் விலையும் கூடுகிறது. குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வருமானவரியில் சலுகையளிக்கப்பட்டிருக்கிறது. சகலரக சிகரட்டின் விலையும் ஒருசதம் அதிகரித்திருக்கிறது.

இப்போது ஒருபோத்தல் சாராயத்தின் விலை எட்டுரூபாய். இனிதென்னை வடி (களுத்துறை) சாராயம் மட்டும் (இரண்டு ரூபாய் கூடுதலாக) பத்துரூபாவாக விற்கப்படும். (கல்லோயா) கருப்பஞ்சாறு வடிசாராயத்தின் விலை அதிகரிக்கப்படமாட்டாது. நிதி அமைச்சர் திரு. பி. வன்னிநாயக்கா நேற்று தமது வரவு—செலவுத் திட்டஉரையில் இவற்றை வெளியிட்டார்.

நிதியமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயகா, தாம் தயாரித்துள்ள புதிய நிதி ஆண்டிற்கான வரவு — செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் நூற்றுஐந்துகோடி ரூபாவையும் சரிக்கட்டுவதற்கான தமது யோசனைகளை அவர் வெளியிட்டார். அவற்றின் முக்கியமானவை வருமாறு:

புகையிலை தீர்வை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ருத்தல் புகையிலையின் தீர்வை இதுவரை 33 ரூபாயாக இருந்தது. இப்போது இது 37 ரூபாய் 50 சதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் சிகரட், சுருட்டு பீடி ஆகியவைகளின் விலை உயரும்.

## விலையில் மாறுதல் இல்லை

மண்எண்ணெய், பெட்ரோல், மாவு, சீனி, தீப்பெட்டி ஆகியவைகளின் விலையில் எவ்வித மாறுதலுமில்லை.

## துணி விலை குறையும்

அச்சடி பப்ரிக், வெள்ளைப் பப்ளின், கலர் பப்ளின், வோயில் குவோர்தி ஆகியவைகளுக்கு யார் ஒன்றுக்கு 25 சதமாக இதுவரை விதிக்கப்பட்டிருந்த இறக்குமதித் தீர்வை ரத்துச்செய்யப்பட்டுவிட்டது. இதனால் இத்துணிகளின் விலைகள் குறையும்.

அடுத்த பெரும் போகத்துக்குமுன்னர் 60 ஆயிரம் ஏக்கர் நிலத்துக்கு பாசன வசதியளிப்பதென நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். தேசிய வருமானம் அதிகரித்துள்ளதென்றும், நாட்டில் உற்பத்தி அதிகரித்துள்ளதென்றும் நிதியமைச்சர் இன்று தமது உரையில் தெரிவித்தார்.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

இன்று கம்பளையில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 205-வது சுவீப் முடிவுகள் பின்வருமாறு:-

1-வது பரிசு

04 W 0554 - ரூ. 100,000

2-வது பரிசு

54 X 0220 - ரூ. 40,000

3-வது பரிசு

03 Z 0484 - ரூ. 10,000

தலா ரூ. 1403 சதம் 10 பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம்:

| | |
|---|---|
| 43 B 0703 | 21 N 0268 |
| 42 D 0688 | 05 P 0257 |
| 11 X 0333 | 58 F 0106 |
| 31 Z 0082 | 58 B 0861 |
| 54 P 0432 | 24 H 0541 |
| 14 N 0914 | 02 R 0222 |
| 03 Z 0334 | 42 C 0733 |
| [illegible] | [illegible] |
| 12 F 0512 | 51 R 0370 |
| 22 B 0324 | 08 B 0011 |
| 52 U 0033 | 04 G 0717 |
| 19 J 0001 | 29 B 0991 |
| 25 Y 0390 | 33 U 0532 |
| 22 U 0125 | 03 S 0495 |
| 39 F 0884 | 52 D 0279 |
| 15 F 0979 | 09 P 0235 |
| 46 R 0790 | 42 H 0333 |
| 16 K 0643 | 56 R 0250 |
| 12 B 0093 | 34 B 0660 |
| 29 D 0267 | 01 Z 0887 |
| 31 N 0069 | 12 M 05 3 |

(6ம் பக்கம் பார்க்க)

## வருமான வரிச் சலுகை

வருடத்தில் 3500 ரூபாய் வருமானம் பெறும் தனி மனிதர் ஒருவர் வருமான வரி செலுத்த வேண்டுமென இருந்து வந்தது. இனி வருடத்துக்கு 3900 ரூபாய் வருமானம் பெறுபவர் தான் வரி செலுத்த வேண்டும். 8900 ரூபாயிலிருந்து 1800 ரூபாய் வரை வருட வருமானம் பெறும் அதாவது 3900 ரூபாயிலிருந்து 5700 ரூபாய் வரை வருடத்தில் வருமானம் பெறும் தனிப்பட்ட ஒருவர் 3900 ரூபாய் தொடக்கமான முதல் 1800 ரூபாய் வருமானத்துக்கும் 7 1/2 சத விகிதம் வரி செலுத்த வேண்டும். முதல் 1800 மேல் ஒவ்வொரு 1800 ரூபாய்க்கு மாத பத்து சதவிகிதம், பன்னிரண்டரைச் சதவிகிதம், பதினேழரைச் சதவிகிதமென 65 சதவிகிதம் வரை வரி செலுத்த வேண்டும். இதே விதிப்படி கணவனும் மனைவியுமுள்ள குடும்பத்துக்கும், கணவன் மனைவி, இரண்டு குழந்தைகள், நான்கு குழந்தைகள் உள்ள குடும்பங்களின் வருமானவரியிலும் சலுகையளிக்கப்பட்டிருக்கிறது.

புதிய வருமானவரி விதிப்பு 1970-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அமுலுக்குவரும். வருமானவரித் தொகையை மாதாமாதம் சம்பளத்திலிருந்து கழிக்கும் அதாவது உழைத்துக்கொண்டே வரியை செலுத்தும் திட்டம் கொண்டுவரப்படும். அரசாங்க ஊழியர்களினதும் தனியார் துறை ஊழியர்களினதும் சம்பளத்திலிருந்து கழிக்கப்படும்.

அரசாங்கஊழியர்பற்றி

## புதிய சம்பளகமிஷன் நியமிக்கப்படும்

கொழும்பு, வெள்ளி

அரசாங்க ஊழியரின் சம்பள விகிதம்பற்றி ஆராய்ந்து யோசனை தெரிவிப்பதற்கென புதிய சம்பளக் கமிஷன் ஒன்று நியமிக்கப்படவிருக்கிறது.

நிதி அமைச்சர் திரு. வன்னிநாயகா இன்று நிகழ்த்திய வரவுசெலவுத் திட்ட உரையில் அரசாங்க ஊழியர் சம்பளப் பிரச்னை பற்றிக் குறிப்பிடுகையில் இத்தகவலைத் தெரிவித்தார். அரசாங்க ஊழியருக்கு பல்வேறு அலவன்ஸ்கள் கொடுக்க நேர்ந்துள்ளதென்றும் அவர் சொன்னார்.

சம்பள முரண்பாட்டு விசாரணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட யோசனைகளையும் புதிய சம்பளக் கமிஷன் கவனத்துக்கெடுத்துக் கொள்ளுமென்றும் நிதியமைச்சர் கூறினார்.

பீஹாரில்

## விஷம் கலந்த உணவு உண்டு 52 பேர் மரணம்

பட்னா, ஆக. 2

பீஹார் ராஜ்யத்தில் மூங்கீர்ஜில்லாவில். மதவிழாவை யொட்டி நடைபெற்றவிருந்தொன்றில், உணவில் விஷம் கலக்கப்பட்டிருந்ததால். அந்த உணவைச் சாப்பிட்டவர்களில் 52 பேர் உயிரிழந்தனர். மற்றும் 73 பேர் ஆபத்தான நிலையில், ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற இராமமே. சேகத்தில் மூழ்வியுள்ளது. விருந்து உணவை உட்கொண்ட நாய்களின் சடலங்களும் தெருக்களில் காணப்பட்டன.

உடனடியாக இறந்தவர்களில் சமையற்காரரும் ஒருவராவர். மற்றொரு சமையற்காரரைப் பொலிஷார் விசாரணைக்காகக் கைதுசெய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone 389

யாழ்ப்பாணம் சனிக்கிழமை
ஆடி மாதம் 19-ந்திகதி
(3-8-68)


## சிந்தனையில் மாற்றம்

இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும், இந்நாட்டின் இரு மொழிகளையும் அறியாதிருப்பின் அவர் தமது மாவட்டத்திற்குள் ஒதுங்கி வாழ நேரிடுமென்றும், மாணவ சமுதாயம் ஆங்கில மொழியைக் கற்காதவிட்டால் உலக அறிவைப் பெறமுடியாது போய்விடுமென்றும் பண்டிதமிப்பு இந்துக்கல்லூரி அதிபர் தமது வருடாந்த அறிக்கையில் தெரிவித்திருப்பது மாணவர்களினதும், பெற்றோர்களினதும் மட்டுமல்லாது கல்விமான்களினதும், அரசியல்வாதிகளினதும் சிந்தனையைத் திசைதிருப்பி, நாட்டின் நிம்மதியைக் குலைத்து வரும் ஒரு பெரும் பிரச்சினைக்கு இனியாவது ஒரு நல்ல தீர்வு காண்பதற்கு வழி வகுக்கவேண்டும்.

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் இந்நாட்டின் தேசியமொழிகளாகவும், ஆட்சி மொழிகளாகவும் சிங்களமும் தமிழும் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. ஆங்கிலமொழி உத்தியோக மொழியாக இருந்தது; அது கட்டாய மொழியாகவும் இருந்தது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் பெரும்பான்மையினரின் மொழியான சிங்களத்தைச் சிறுபான்மையினர் அறிந்திருக்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் மற்றும் பகுதிகளிலுமுள்ள தமிழ் ஆங்கிலப் பாடசாலைகளிலும் சிங்களம் படிப்பிக்க ஒழுங்கு செய்யப்பட்டது. தமிழ்ப் பிள்ளைகளின் பெற்றோரும், தமிழ் மக்களும் விரும்பித் தாமாகச் சிங்களம் படிக்க, படிப்பிக்க முன்வந்தனர். 1956ம் ஆண்டில் சிங்களம் மட்டுமே இலங்கையின் தேசிய மொழியென்றும், உத்தியோக மொழியென்றும் சட்டம் கொண்டுவரப்பட்டபோதுதான், தமிழர் தமது சுயமரியாதையைக் காப்பாற்றவும் தமிழ் மொழியின் அந்தஸ்தைக் குறைக்கச்செய்யும் முயற்சியை எதிர்த்தும் சிங்களம் படிப்பதை நிறுத்தினர். சிங்கள ஆசிரியர்களைப் பாடசாலைகளில் இருந்து திருப்பி அனுப்பினர்.

மொழிப்பிரச்சினையை அரசியலுக்குள் இழுத்துப் பெரும் அரசியல்பிரச்சினையாக்கி அதன் மூலம் அரசியல் இலாபம் தேடிய இந்நாட்டு அரசியல் தலைவர்கள், நாட்டின் பலன் கருதிக் கடந்த பன்னிரண்டு வருட காலத்துக்குள்ளாவது இவ் மாறுதலைச்செய்ய முன்வந்திருக்கவேண்டும். சிறுபான்மையினரின் ஒத்துழைப்பில்லாமல் பெரும்பான்மையினர் நிம்மதியாக ஆட்சி புரிவதும், பெரும்பான்மையினரின் நல்லெண்ணமும், நல்லுறவுமில்லாமல் சிறுபான்மையினர் நிம்மதியாக வாழ்வதும் சுலபமல்ல. இரு பான்மையினரும் பெரும்பான்மையினரும் நட்புறவுடன் வாழ்ந்தால் தான் நாடு முன்னேறும். இதை இன்று பலரும் உணரத் தொடங்கியுள்ளனர். ஆயினும் அரசியல் ஆதிக்கப்போட்டியும் அரசியல் இலாபம் தேடும் மனப்பான்மையும் மொழிப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு காண்பதற்கு இடையூறாக இருக்கிறது. என்றாலும் கல்விமான்கள், அரசியல் தலைவர்களின் சிந்தனையில் சிறிது மாற்றம் ஏற்பட்டுவருவது இப்பிரச்சினைக்கு எப்படியும் விரைவில் ஒரு நல்ல தீர்வு காணமுடியுமென்ற நம்பிக்கையை ஊட்டுகின்றது.

சிங்கள மக்கள் தமிழ் மொழியையும் கற்க வேண்டியது அவசியம் என்று தேசிய உயர் கல்விச் சபைத் தலைவரான டாக்டர் மலலசேகரா கூறுகிறார். "ஒரு சிங்களவர் தமிழரை ஆக்கிரமப்படுத்தினாலோ, தமிழர் சிங்களவரை ஆக்கிரமப்படுத்தினாலோ மறுபிறப்பில் சிங்களவர் தமிழராகவும், தமிழர் சிங்களவராகவும் பிறந்தால் எப்படியிருக்கும்?" என்று உபதேசம் செய்கிறார் கல்வி அமைச்சர். தமிழர் சிங்களத்தையும் சிங்களவர் தமிழையும் மூன்றாவது மொழியாகப் படிக்கலாமென்று ஆட்சி மன்றத்திலேயே தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் கூறினார். சிங்களமும் தமிழும் மூன்றாவது இஷ்ட பாடமாகப் படிப்பிக்கலாமென்று தமிழ்க் காங்கிரஸ் தலைவர் சென்ற ஆண்டு மகாநாட்டில் தெரிவித்தார். உண்மையான தேசிய ஐக்கியத்துக்குள்ள ஒரே வழி கல்வித்திட்டத்தைத் திருத்தி சிங்களப் பிள்ளைகளும் தமிழ்ப் பிள்ளைகளும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் கற்க வழி செய்யவேண்டுமென்று சமீபத்தில் ஆட்சிமன்ற மூதவையில் உறுப்பினர் கொர்னல் திஸநாயகா கூறியிருக்கிறார்.

இதே சமயம் ஒரே மொழி ஒரே இனம் என்ற ஆர். ஜி.யின் குரலும் ஒலிக்கிறது. அது நிறைவேற முடியுமா?

# காந்திஜியின் போதனைகள் செயலாக்க ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்படும்

## யாழ். குடாநாட்டில் நூற்றாண்டு விழாவுக்கு விரிவான ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், சனி

இவ்வருடம் அக்டோபர் மாதம் 2-ந் திகதி முதல் அடுத்த வருடம் அக்டோபர் மாதம் 2-ந் திகதி வரை யாழ்ப்பாணக் குடாநாட்டில் காந்தி நூற்றாண்டு ஜயந்திவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட சர்வோதய சம்மேளனம் ஒன்று விரைவில் நிறுவப்படவிருக்கின்றது.

காந்தி ஜயந்தி விழா உலகமெங்கும் கொண்டாடப்படவேண்டுமென 'யுனெஸ்கோ' ஸ்தாபனம் வேண்டியுள்ளதால் குறிப்பிட்ட ஒருவருடமும் இச்சேவையில் ஈடுபடும் தொண்டர்களைக் கொண்ட குழு ஒன்று இதற்காக சம்மேளனத்தில் நியமிக்கப்படும்.

பின்வரும் திட்டங்களை காந்தி நூற்றாண்டு ஜெயந்தி விழாவின் ஒரு வருட காலத்திலும் குறிப்பிட்ட தெரிவுக்குழு நடைமுறைக்குக் கொண்டுவரும்.

ஃ பாடசாலைகள் மூலம் காந்திஜியின் கொள்கைகளைப் பரப்புதல். இதற்குப் பேச்சாளர் பட்டியல் ஒன்றைத் தயாரித்து ஒரு வருட காலத்துக்கும் பாடசாலைகளில் பிரசங்கமும், கருத்தரங்குகளும், படக்காட்சிகளும் நடாத்துதல்.

ஃ காந்திஜி எழுதிய "பகவத்கீதையும் புதிய ஏற்பாடும்" என்ற நூலை இவ்விழாவில் முக்கிய கவனத்துக்கு எடுத்துக்கொள்ளல்.

ஃ யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு கிராமத்தைத் தெரிந்தெடுத்து அங்கு காந்திஜியின் போதனைகளுக்கமைய தீண்டாமை, மது ஒழித்தல், கட்சிசார்பற்ற ஜனநாயகம் ஆகியவற்றைத் தீவிரமாகப் பரப்பி அவற்றில் அக்கிராமத்தை வெற்றியீட்டச் செய்து கிராம சுயராச்சியம் அமைத்தல்.

ஃ சிரமதானம், சம்பத்து தானம், புத்திதானம், பூமி தானம், ஜீவன் தானம் என்பன பற்றியும், சர்வமதப் பிரச்சினைகள் பற்றியும் பொதுமக்களுக்கு எடுத்துரைத்தல்.

இச்சங்கத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் கூடிய சீக்கிரம் நடைபெறவிருப்பதால் ஒரு வருட காலத்துக்கும் இச்சேவையில் ஈடுபட விரும்புவோர்களை யாழ்ப்பாணம் அரசாங்க செயலக நலவுரிமைச்சங்கச் செயலாளர் திரு. க. ஜெயராசாவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (கா. நி.)

## ஆலய உற்சவம்

சுழிபுரம் வெள்ளி

பொன்னாலை வரதராசப் பெருமாள் கோவில் கொடியேற்றத் திருவிழா நேற்று பகல் நடைபெற்றது. தொடர்ந்து பதினேழு தினங்கள் அலங்காரத் திருவிழா நடைபெற்று தேர்த் திருவிழா நடைபெறும்.

அடுத்ததினம் சுழிபுரம் திருவடிநிலைத் தீர்த்தக்கரையில் தீர்த்தம் நடைபெறும். தீர்த்த வைபவத்தின்போது அன்னதானம் வழங்கப்படும்.

உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு வைரவர் கோவில் 5-ம் திருவிழாவான இன்று விசேஷ அபிஷேகம் நடைபெறும். இரவு குமாரி லீலா நாராயணனின் பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெறும்.

காரைநகர்

காரைநகர் அரசடிக்காடு சுப்பிரமணியசுவாமி கோவில் ரதோற்சவம் வரும் 8-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

## இன்றைய பலன்

(3-8-68)

ஆடி மீ 19 உ

சனிக்கிழமை

திதி- நவமி காலை 6-44 மேல் தசமி.

நட்சத்திரம்- அனுஷம் இரவு 2-09 மேல் கேட்டை.

ராகுகாலம் - 9-04-10-34.

எமகண்டம்- 3-04—4-34.

இன்று பிறந்தவர்களுக்கு- தடுமாற்றமுண்டு. தவறான பாதையைத் தவிர்த்துக்கொள்ளவும். குடும்பத்தில் சிறிது அபிப்பிராயபேதங்கள் தலைதூக்கக்கூடும். வழக்கறிஞர்கள் வாழ்க்கையில் வெற்றியுண்டு. மாணவர்களாயின் கல்வியில் அதிககவனம்செலுத்தவும். வணிகர்கள் அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்வது நன்று. ஆடம்பரச் செலவுகளால் சிலர் கடன் தொல்லைகளில் மாட்டிக்கொள்ளக்கூடும். பொதுவாகப் பொறுமை நன்று.

மேஷம்- துன்பத்தின் நிழலாட்டம், துயர் படிக்கநாள்.

ரிஷபம்- காதல் கலை துளிக்கும், உள்ளம் உற வாடத்துடிக்கும்.

மிதுனம்- நம்பிக்கெடுதல், நஷ்டமடைதல்.

கடகம்- தைரியம் பிறக்கும், தந்தையின் ஆதரவும் கிடைக்கும்.

சிம்மம்- பதவியில் உயர்வு பல்லகைவிருந்து.

கன்னி- மக்களால் மகிழ்ச்சி, மனைச்சிறப்பு.

துலாம்- சிந்தனைப் புதிர், சிறிவரும்சோபம்.

விருச்சிகம்- வாழ்க்கையில் புயல், வரவும்தடைப்படும்.

தனுசு- தேன் சிந்தும் பேச்சு, தேடியது கிடைக்கும்.

மகரம்- உள்வீட்டில் பூசல் உபத்திரவ மிகுதி.

கும்பம்- தாய்வழிச் சுகம், தனத்துடன் வாழ்வு.

மீனம்- இன்பம் பொங்கும், இனசனமகிழ்ச்சி.

## தண்ணீர் கஷ்டம்

உடுப்பிட்டி, வெள்ளி

கடும் வெயில் காரணமாக கரவெட்டி கிழக்கு, அத்துளு அம்மன் கோவிலுக்கு அணமையிலுள்ள நல்ல தண்ணீர்க் கிணற்றில் மதியான வேளைக்குப் பின்னர் நீரில்லாது வற்றிவிடுவதால் கவுந்தில், நெடுந்தனை, கிழவித்தோட்டம் பகுதி மக்கள் பெரும் கஷ்டமடைந்து வருகின்றனர்.

# நாட்டிலும் நகரிலும்

ஹே! ஆபத்பாந்தவா! அநாதரட்சகா! ஆர். ஜி. சேனநாயகா!

அடியேமை ஆட்கொள்ள அவதரித்த தேவதூதா! யானும் என்போன்றஅறிவிலிகளும் இதுகாறும் தங்களைப்பற்றி எவ்வளவு தவறாக நினைத்துவிட்டோம். அபசாரம், அபசாரம், தேவரீர் மன்னித்தருள்வீராக!

இப்பொழுதல்லவா தெரிகிறது தங்கள் மகோன்னத மேதாவிலாசம். அடடா, அதை வர்ணிப்பதற்கு ஆயிரம் நாவுபடைத்த அந்த ஆதிசேஷனாலும் முடியுமோ என்பது சந்தேகம்.

ஆஹா, தாங்கள் உதிர்த்துக்கொட்டியிருக்கும் 'லேட்டஸ்ட்' மணிவாசகங்களில் பொதிந்துகிடக்கும் அரசியல் தீர்க்கதரிசனம் தான் என்னே! அவை சாதாரண அரசியலைவாதிகள் கக்கிக்கொட்டும் உளறிபடிகளா என்ன? நீச்சே, பினேட்டோ, ராதாகிருஷ்ணன், மார்க்ஸ் இவர்களெல்லோரும் ஒன்றுகூடி ஒரு யுகத்துக்கு மந்திராலோசனை நடத்தினாலும் தங்கள் சித்தாந்தத்தை எட்டியும் பார்க்கமுடியாது?

கண்ணியமற்றவர், கட்சி விட்டு கட்சி தாவுகிறவர், நெறியற்றவர், நிலையில்லாதவர் என்றெல்லாம் சிலர் தங்களை வர்ணிப்பதுவெறும் வயிற்றெரிச்சலால் என்பதை இப்பொழுது உணர்ந்து கொண்டேன். இப்படியெல்லாம் தாங்கள் அரசியல் சூறாவளியில் அலைந்து உலைந்து அங்கலாய்த்தபடியினாலன்றோ அறிவுப்பெருக்கமும் அனுபவஞானமும் உண்டாகி, சாணக்கியனும் வெட்குப்படியான அதியற்புதஅரசியல் கருத்தைவெளியிட்டிருக்கிறீர்கள்.

சிங்களமொழியும் பௌத்தமதமுமே இலங்கையில் இருக்கவேண்டுமென்று காலஞ்சென்ற பண்டாரநாயகாவும் வேறு சிலரும் நினைத்தார்கள். இது பேதமையென்று எனக்கு அப்பொழுதே பட்டது.

"இலங்கையில் ஒரே ஒரு சாதிதான் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் தேசிய ஒற்றுமை ஏற்படும்" என்று தாங்கள் சமீபத்தில் கூறியுள்ளதைக் கேள்விப்பட்டதும் எனக்குண்டான பூரிப்புக்கு எல்லையில்லை. இந்த சுலபமான மார்க்கத்தை இவ்வளவுகாலமும் ஏன் ஒருவரும்கண்டுபிடிக்கவில்லையென்று ஆச்சரியப்பட்டேன்.

'இலங்கையில் ஒரே ஒரு சாதி, அதாவது சிங்களசாதி, இருக்கவேண்டும் சிறுபான்மையினர் முறையே சிங்களத்தமிழர், சிங்களச்சோனகர், சிங்களப்பறங்கியர் என்றழைக்கப்படுவார்கள் இதனால் தேசம் ஒற்றுமைப்படும், நாடு வளம்பெறும்.' தங்களது இத் திருவாய் மொழியை நான் பத்திரிகையிலிருந்து கத்தரித்தெடுத்து வீட்டு முகப்பில்ஒட்டிவைத்திருக்கிறேன், ஐயா!

ஆயினும் என்மனதில்இன்னும் ஒரு சிறியகுறை இருந்துகொண்டு தலைக்கிறது. ஒரேசாதி என்பதோடுதான் கைவிட்டிருக்கப்படாது. அத்துடன் ஒரேமொழி, ஒரே மதம், ஒரேஉடை, ஒரே உணவு என்று தொடர்ந்து இந்நாட்டிலிருக்கவேண்டும் அப்பொழுதுதான்எமது லட்சியம் பூர்த்தியடையும். அப்பொழுதுதான் ஸ்ரீலங்கா உலகுக்கெல்லாம் ராமராஜ்யமாக விளங்கும்.

'லங்கா' என்று சொன்னேன். ஐயோ, தப்பு, தப்பு.

லங்கா என்றபெயர்வேலைக்காரன் வைத்த பெயர் என்றும் அதற்கு முன்புஇத் தீவுக்கு பெயர் 'சிங்கள' என்பதே என்றும் தாங்கள் மேலும் திருவாய்மலர்ந்தருளியிருப்பதை அறவே மறந்துவிட்டேன்.

பாருங்கள், இந்தப் பெயர் விஷயத்தில் அந்த வால்மீகிகூட முட்டாளாகி விட்டாரே! கம்பனை விட்டுத் தள்ளுங்கள், அவன்தமிழன்!

தங்கள் மூதாதையாகிய விஜயன்கூட இதில் தவறு செய்துவிட்டார் போலும்! அவர்வந்திறங்கிய இடத்தில் இருந்த சிவந்த மண்ணைக் கண்டதும் அவர் இத்தீவை 'தம்பபாணி' என்று அழைத்தாராம். வங்கத்திலிருந்து வரும்வழியில் தமிழரவருணி என்ற பெயரைக் கேள்விப்பட்டார் போலும்.

போனால் போகட்டும். எப்படியாயினும் தாங்கள் இப்பொழுது தொடங்கியிருக்கும் இச் சிஜயத்தை 1970 வரையிலாவது கைவிடப்படாதென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளும்,

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செக். நெருக்கடி இன்னும் தீரவில்லை

## மீண்டும் நடைபெறும் பேச்சுக்களில் மற்றும் நான்கு நாடுகள் பங்குபற்றும்

### பிராக்கில் மாணவர் ஆர்ப்பாட்டம்: மக்களிடையே ஆழ்ந்த சந்தேகம்

பிராக், ஆக. 2

**ரஷ்யத்தலைவர்களுக்கும், செக்கோஸ்லாவாக்கியத் தலைவர்களுக்குமிடையே, செக்கோஸ்லாவாக்கிய கிழக்குப்புற நகரான சியார்னவில் கடந்த நான்கு நாட்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முடிவடைந்துள்ளன.**

**இரு நாட்டுத் தலைவர்களும், தாம் மீண்டுமொருமுறை, நாளை சனிக்கிழமை செக்கோஸ்லாவாக்கியாவிலுள்ள ஸ்லோவாக் பகுதியின் தலைநகரான பட்டிஸ்லாவாவில் சந்தித்துப்பேசுவது என உடன்பட்டுள்ளனர்.**

**நான்கு நாடுகள் பங்குபற்றுகின்றன**

பட்டிஸ்லாவாவில் நடைபெறவிருக்கும் இப்பேச்சுவார்த்தைகளில், பல்கேரியா, கிழக்கு ஜெர்மனி, ஹங்கேரி, போலந்து ஆகிய நான்கு கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகளின் உயர் தலைவர்களும் பங்குபற்றுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நான்கு நாடுகளும், ரஷ்யாவுடன் சேர்ந்து, செக்கோஸ்லாவாக்கியாவின் புதிய சோஷலிஸத் தாராளக்கொள்கையைக் கண்டித்தவையாகும். வார்ஸோ ராணுவ ஒப்பந்தத்தில் அங்கம் வகிக்கும் இச்சகம்யூனிஸ்ட் நாடுகளைச் செக்கோஸ்லவாக்கியா தனித்தனியே சந்தித்துப்பேசும் என்று செக். தலைவர் திரு. டுபெக் முன்னர் அறிவித்திருந்தார்.

**ஆழ்ந்த சந்தேகங்கள்**

ஆனால், இப்போது அந்த நாடுகளின் தலைவர்களும், பட்டிஸ்லாவாக் கூட்டத்தில் பங்கு பற்றப்போகிறார்கள் என்ற செய்தி, செக்கோஸ்லாவாக்கியாவில் ஆழ்ந்த சந்தேகங்களை உருவாக்கியுள்ளது.

இது ரஷ்யர்களுக்கு ஒரு வெற்றி எனச் சில வட்டாரங்கள் கருதுகின்றன. ஆனால் அவ்விதம் கருதுவது அவசரமாக வெளியிடப்பட்ட அபிப்பிராயமாகுமென்றும் கூறலாம்.

ஏனெனில் முதலாவதாக ரஷ்யர்கள், செக். தலைவர்களை ரஷ்யாவில் ஓர் இடத்திலேயே சந்திப்போமென்று வலியுறுத்தியிருந்தனர். ஆனால், செக். தலைவர்களோ தமது நாட்டிலேயே சந்திப்பு நிகழவேண்டுமென்ற கொள்கையில் பிடிவாதமாக நின்றனர். அதில் அவர்கள் விரும்பியது போலவே நடந்தது.

இப்போதும் பட்டிஸ்லாவாக் கூட்டத்துக்கு மற்றைய நான்கு கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகளும் அழைக்கப்பட வேண்டுமென்று ரஷ்யா கேட்டிருப்பது, செக்கோஸ்லவாக்கியாவைப் பயமுறுத்துவதற்கென்று கூறிவிடமுடியாது, தமது புதிய சோஷலிஸத் தாராளக் கொள்கை பற்றிய செக். தலைவர்களின் விளக்கத்தை இந்த நான்கு நாட்டுத் தலைவர்களும் கேட்டறிந்து கொள்ள வேண்டுமென்ற ரஷ்யாவின் விருப்பமே இதற்குக் காரணமாக இருக்கலாம்.

எது எப்படியாயினும், சியர்னாக் கூட்டத்திலிருந்து பிராக் திரும்பியுள்ள செக். தலைவர்களுக்கு இந்நான்கு நாடுகள் பங்குபற்றும் பேச்சுவார்த்தைகளுக்கு உடன்பட்டுள்ள தமது முடிவைப் பிடித்து செக். மக்களுக்கு விளக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

**மாணவர் ஆர்ப்பாட்டம்**

அவர்கள் பிராக் திரும்பியதும், அங்கு நாட்டின் புதிய கொள்கைக்கு ஆதரவு வெளியிட்டும் மாணவர் ஆர்ப்பாட்டமொன்று அவர்களைக் காத்திருந்தது.

**தலைவர் பேச்சு**

செக்கோஸ்லவாக்கியாவின் புதிய சோஸலிஸத் தாராளக் கொள்கையின் தலைவர் எனக் கருதப்படும் திரு. குரொக்கொல்ஸ்கியை, மாணவ ஆர்ப்பாட்டக்காரர், பிராக்கின் பழைய சதுக்கத்துக்கு அழைத்துச் சென்று, சியர்னாவில் நடந்த பேச்சுவார்த்தைகள் பற்றி முழுமையான விளக்கம் அளிக்குமாறு கோரினர்.

**[illegible]க்குவது நிறுத்தப்படும்**

அவர், அங்கு அமைக்கப்பட்ட மேடையில் ஏறிப் பேசுகையில், இருநாட்டுத் தலைவர்களும், ஒருவரை ஒருவர் தாக்குவதை நிறுத்திக்கொள்வதெனச் சியர்னாப் பேச்சுவார்த்தைகளில் உடன்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

பட்டிஸ்லாவாவில் நடைபெறவிருக்கும் கூட்டம், ஒரே ஒருநாள் மட்டும்தான் நடைபெறுமென்றும், அக்கூட்டத்தில் செக்கோஸ்லவாக்கியாவின் புதிய கொள்கைபற்றி எதுவும் குறிப்பிடப்படாது என்றும் அவர் மேலும் கூறினார். அக்கூட்டத்தில், கம்யூனிஸ்ட் நாடுகளுக்கிடையே, விசேஷமாக வார்ஸோ உடன்படிக்கை அங்கத்துவ நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்புப் பற்றியே பேசப்படுமென்றார் அவர்.

## 'புதிய பாதையிலிருந்து விலகிச் செல்லோம்'

### செக். ஜனாதிபதி அளிக்கும் உறுதி

செக்கோஸ்லவாக்கிய ஜனாதிபதி திரு. ஸ்வொபோடா, நாட்டு மக்களுக்கு ஒலிபரப்பிய செய்தியொன்றில், நாடு ஏற்றுக்கொண்டுள்ள புதிய பாதையிலிருந்து விலகப்போவதில்லை என்று உறுதியளித்தார். நாட்டின் புதிய பாதையில் முன்னேறிச் செல்வது என்று செக். தலைவர்கள் உறுதிபூண்டுள்ளதாகத் திரு. ஸ்வொபோடா கூறினார்.

அதேநேரத்தில், கம்யூனிஸ சமூகத்தின் ஓர் உறுதியான அங்கமாக என்ற ரீதியல்லாது, செக்கோஸ்லாவாக்கியா தனித்து வாழ முடியாதென்பதையும் அவர் மக்களுக்கு நினைவூட்டினார். பட்டிஸ்லாவாப் பேச்சுவார்த்தைகளில் பல்கேரியா, ஹங்கேரி, கிழக்கு ஜெர்மனி, போலந்து ஆகிய சக வார்ஸோ ஒப்பந்த நாடுகளும் கலந்துகொள்வது, தமது நாட்டின் புதிய அரசியற்கொள்கைபற்றி விவாதிக்கவேயாகும் என்றும் ஜனாதிபதி ஸ்வொபோடா தெரிவித்தார்.

**யூகோ-ருமேனிய தலைவர் வருகை**

இதற்கிடையில், செக்கோஸ்லாவாக்கியாவின் புதிய கொள்கைக்கு அதிக ஆதரவு அளித்துள்ள யூகோஸ்லாவியாவின் தலைவர் டிட்டோவும், ருமேனியாவின் ஜனாதிபதி சிஸெஸ்குவும், அடுத்தவாரம், பிராக் வந்துசேரவிருக்கிருர்கள். செக். [illegible] நடத்துவதாகத்.

**ஜெனிவா**

## ஆயுத பரிகரண மாநாடு

### ருமேனியா கோரிக்கை

ஜெனிவா, ஆக. 2

ஜெனிவாவில் நடைபெறும் ஆயுத பரிகரண மாநாட்டில், எல்லாநாடுகளிலுமுள்ள அந்நிய துருப்புகள் வெளியேற்றப்பட வேண்டுமென்றும், வட அத்திலாந்திக், வார்ஸோ இராணுவ ஒப்பந்தங்கள் போன்றவை ஒழிக்கப்பட வேண்டுமென்றும் ருமேனியா கோரியுள்ளது.

## சீனவில் மோதல்

### 130 பேர் மரணம்

ஹொங்கொங், ஆக. 2

சீனவில், சிங்கியாங் மாகாணத்தில் அண்மையில் செங்காவலருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே ஏற்பட்ட கடும் மோதலில், 130 பேர் உயிரிழந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 4000 அமெரிக்க துருப்புகள் வந்தன

சைகோன், ஆக. 2

நாலாயிரம் அமெரிக்கத் துருப்புகள், தென்வியட்னாமுக்கு வந்துசேர்ந்துள்ளன.

இவை மாதங்களுக்குமுன் ஜனாதிபதி ஜோன்ஸன் அறிவித்த புதிய அமெரிக்கத் துருப்பு விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழேயே இவை வந்துள்ளன.

## பிலிப்பைன்ஸ் தலைநகரில் கடும் பூகம்பம்

### 300 பேர் இறந்தனர்

மணிலா, ஆக. 2

இன்று அதிகாலை, பிலிப்பைன்ஸ் தலைநகரான மணிலாவிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஏற்பட்ட கடும் பூகம்பமொன்றில், குறைந்தது 300 பேராவது உயிரிழந்துள்ளனர்.

மணிலா நகரின் பழைய பகுதியில், 5 மாடிக் கட்டிடம் ஒன்று இடிந்துவிழுந்ததன் விளைவாகவே இந்த உயிர்ச்சேதம் ஏற்பட்டது. கட்டிடத்தின் இடிபாடுகளுக்கிடையே 1000 பேர் வரை அகப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரண வேலைகளிலும், மீட்பு வேலைகளிலும் ஈடுபட்டுள்ளோர், இடிபாடுகளுக்குள் அகப்பட்டுக்கிடக்கும் ஆட்களை அகற்றுவதில் தீவிரமாக முனைந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்க்கோஸ், இராணுவத்தையும் மற்றும் நிவாரண ஸ்தாபனங்களையும் பூகம்ப நிவாரணவேலைகளில் ஈடுபடுத்தியுள்ளார். மறு அறிவித்தல்வரை எல்லாப் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் மூடப்பட்டிருக்க வேண்டுமென்று அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மணிலாவில் ஏற்பட்ட முதலாவது நில அதிர்ச்சியே மிகவும் கடுமையானது. பின்னர் இரண்டாவது தடவையாக ஏற்பட்ட நில அதிர்ச்சி, கட்டிடங்களில் வெடிப்புகளை ஏற்படுத்தியது. மூன்றாவது நில அதிர்ச்சி, இலேசானது.

## பிரிவி கவுன்ஸில் தீர்ப்பு

### ரொடீஷியா நிராகரித்தது

சலிஸ்பரி, ஆக. 2

சட்டவிரோதமான ரொடீஷிய ஆட்சியாளர், சட்டவிரோதமாகக் கைதுசெய்து சிறைத்தண்டனை விதித்த ஓர் ஆபிரிக்கத் தேசியவாதியை விடுதலைசெய்ய வேண்டுமென்று சாம்ராஜ்ய நாடுகளின் உயர்நீதிமன்றமான பிரிட்டிஷ் பிரிவு கவுன்ஸில் அளித்துள்ள தீர்ப்பை, ரொடீஷியா நிராகரித்துள்ளது.

## தென்வியட்னாம் அரசாங்கத்தை

### அமெரிக்க உபஜனாதிபதி கண்டித்தார்

வாஷிங்டன், ஆக. 2

வியட்கொங்கியருடன் சமாதானம் பேசவேண்டுமென்று விருப்பம் தெரிவித்த தென்வியட்னாமியர் ஒருவருக்குத் தென்வியட்னாம் அரசாங்கம் 5 வருடச் சிறைத்தண்டனை விதித்திருப்பதை அமெரிக்க உபஜனாதிபதி திரு. ஹம்ப்ரி இங்கு கண்டித்துள்ளார்.

சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட இத் தென்வியட்னாமியர், கடந்த தென்வியட்னாம் சட்டசபைத் தேர்தல்களில் ஒரு 'சமாதான' அபேட்சகராகப் போட்டியிட்டவராவார்.

நாட்டில் சுதந்திரமான தேர்தல்கள் நடத்தவேண்டுமென்றும், வியட்கொங்கியருடன் சமாதானம் பேசவேண்டுமென்றும் அவர் கோரியிருந்தார்.

சுதந்திரமான தேர்தல்களை நாட்டில் நடத்தவேண்டுமென்ற கொள்கைக்கு ஆதரவான ஒருவரைச் சிறைத்தண்டனைக்கு அனுப்பும் தென்வியட்னாம் அரசாங்கத்தை, சுதந்திரமான தேர்தல் நடத்த எப்படி அமெரிக்கா தூண்டப்போகின்றதென்பது தெரியவில்லையென்று திரு. ஹம்ப்ரி குறிப்பிட்டார்.

## ரஷ்யாவில் இலங்கை மாணவர்

மாஸ்கோ, ஆக. 2

சோவியத்—இலங்கை நட்புறவுக் கழகம் பட்ரீஸ் லுமும்பா சர்வ கலாசாலையில் கல்விபயிலும் இலங்கைமாணவர்களின் யரஸ்லவ் பிரயாணத்தைச் சமீபத்தில் ஏற்பாடுசெய்தது. மாபெரும் ரஷ்ய நதியான வொல்கா தீரத்திலுள்ள இந்த நகரில் ஈழத்து மாணவர்கள் இரண்டுதினங்கள் தங்கியிருந்தனர். ரஷ்யக் கட்டடக் கலையின் தலைசிறந்த சின்னங்களை அவர்கள் கண்டுரசித்தனர். புதிய குடியிருப்பு மாவட்டங்களைப் பார்வையிட்டனர், ஐரோப்பாவில் உள்ள மிகப் பெரியவற்றுள் ஒன்றான 'டயர்' தொழிலகத்தை விஜயஞ்செய்தனர்.

## வடவியட்னாம் துருப்பு ஊடுருவல்

### தென்வியட்னாம் புகார்

சைகோன், ஆக. 2

வடவியட்னாமிலிருந்து அதிக அளவில் துருப்பு ஊடுருவல்கள் தென்வியட்னாமுக்குள் நடைபெறுவதாகத் தென்வியட்னாம், சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷனிடம் முறையிட்டுள்ளது.

அமெரிக்கா, வடவியட்னாம் மீதான குண்டுவீச்சைக் கட்டுப்படுத்தியுள்ளதைத் தனக்குச் சாதகமாக வடவியட்னாம் பயன்படுத்திக்கொள்வதையே இந்த ஊடுருவல் காட்டுகிறதாகத் தென்வியட்னாம் தனது புகாரில் குறிப்பிட்டுள்ளது.

வடவியட்னாம் ஊடுருவல்கள் பற்றிவிசாரணை நடத்துமாறு தென்வியட்னாம் சர்வதேசக்கட்டுப்பாட்டுக் கமிஷனிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

## ரஷ்யாவில் ஈரான் மந்திரி

மாஸ்கோ, ஆக. 2

ஈரான் நீர்த்தேக்க மின்சார அமைச்சர் ஹமீட் ஸாலி இங்கு விஜயஞ்செய்துள்ளார். மின்சார உற்பத்தித்துறையில் ஒத்துழைப்பை ஏற்படுத்தும் பிரச்னை குறித்து இவர் பேச்சுவார்த்தை நடத்துவார்.

## ஜோன்ஸன் கோரிக்கை

வாஷிங்டன், ஆக. 2

உலகப் பொதுஜன அபிப்பிராயம், வடவியட்னாமை அதன் இராணுவ நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தத் தூண்டவேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸன் கேட்டுக்கொண்டுள்ளார்.

உலகப் பொதுஜன அபிப்பிராயத்துக்குச் செவிமடுத்து, வடவியட்னாம் மீதான குண்டு வீச்சை அமெரிக்கா கட்டுப்படுத்தியுள்ளதையும் திரு. ஜோன்ஸன் சுட்டிக்காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலி கிராமசபை எல்லை விபரங்கள்

யாழ்ப்பாணம், சனி

அராலி கிராமசபையின் 11, 12ம், 13ம், வட்டார எல்லை விபரங்கள்:

11-ம் வட்டாரம்

[செட்டிமாமடம்]

வடக்கு: 10 ம் வட்டாரத்தின் வடகிழக்கு அந்தத்திலிருந்து தென் கிழக்கு நோக்கி காரைநகர்—யாழ்ப்பாண வீதியின் தெய்வ பாலத்தின் ஓரமாகவும், அதே திசையில் சங்கரத்தை வீதிச் சந்தியைக் கடந்து செம்பகத்தோட்ட ஒழுங்கையின் மத்தியைச் சந்திக்கும் வரையும் வரைப்பட்ட ஒரு கோட்டினால்

கிழக்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தெற்குநோக்கி செம்பகத் தோட்ட ஒழுங்கையின் மத்தியோரமாக 45ம் 46ம் இலக்க கிராம சேவகர் பிரிவுகளின் எல்லையாக அமைந்துள்ள ஓடைக் குளம் வாய்க்காலின் மத்தியைச் சந்திக்கும் வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

தெற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து மேற்குநோக்கி 45ம், 46ம் இலக்க கிராம சேவகர் பிரிவுகளுக்கிடையான எல்லையோரமாக 10-ம் வட்டாரத்தின் தென் கிழக்கு எல்லையைச் சந்திக்கும் வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

மேற்கு- தெற்கிலிருந்து வடக்குவரை, 10ம் வட்டாரத்தின் கிழக்கெல்லை, ஆகக்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளதுபோல இதற்கும் பொருந்தும்.

12-ம் வட்டாரம்

[மயிலிப்புலை]

வடக்கு: 10-ம் வட்டாரத்தின் வடகிழக்கு எல்லையிலிருந்து வடகிழக்கி நோக்கி 45-ம் இலக்க கிராம சேவகர் பிரிவின் வட எல்லையோரமாகவும் சங்கரத்தை—துண்ணுவி வீதியைக் கடந்தும், மீண்டும் கிழக்கு நோக்கிச் சொல்லப்பட்ட கிராமசேவகர் பிரிவின் வட எல்லையோரமாக வழுக்கை ஆற்று வாய்க்காலைச் சந்திக்கும்வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்

கிழக்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தெற்கு நோக்கி வாய்க்காலின் கிழக்கு அணையின் ஓரமாக வழுக்கையாற்றுப் பாலத்தைச் சந்திக்கும்வரை வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

தெற்கு கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து யாழ்ப்பாணம் காரைநகர் வீதியின் மத்திக்கூடாகச் சங்கரத்தை வீதியைக் கடந்து மேலும் வடமேற்கு நோக்கி யாழ்ப்பாணம் —காரைநகர் வீதியிலிருந்து 45ம் இலக்க கிராம சேவகர் பிரிவின் வட எல்லைக்கோடு வடகிழக்கு நோக்கிப் பிரியும் இடம் வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

மேற்கு: 12 ம் வட்டாரத்தின் தென் எல்லையில் வரையறுக்கப்பட்டுள்ள கடைசியாகச்சொல்லப்பட்ட இடத்தினால்.

13-ம் வட்டாரம்

[நாகேந்திரமடம்]

வடக்கு: செம்பியன் தோட்ட ஒழுங்கை யாழ்ப்பாணம்— காரைநகர் வீதியைச் சந்திக்கும் சந்தியிலிருந்து தென்கிழக்கு நோக்கிச் சொல்லப்பட்ட பிரதான வீதியின் மத்தியினோரமாக வழுக்கை ஆற்றுப் பாலத்தின் கீழ் அந்தத்தைச் சந்திக்கும்வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்

கிழக்கு; வழுக்கை ஆற்றுப் பாலத்தின் கிழந்தத்தினாய்

தெற்கு- கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து மேற்குநோக்கி ஓடைக்குளம் வாய்க்காலின் மத்தியினோரமாக லப்பேட் பாலத்தைச் சந்திக்கும் வரையும் அங்கிருந்து மீண்டும் தெற்கு நோக்கி ஓடைக்குளத்தினூடாக பிரதான பாலத்தின் மத்தி வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

மேற்கு- கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடக்கு நோக்கிப் பிரதான பாலத்தின் மத்தியினூடாகவும், யாழ்ப்பாணம்—காரைநகர் வீதிக்கு இடுச்செல்லும் செம்பாத்தோட்டம் ஒழுங்கையினோரமாகவும் சொல்லப்பட்ட பிரதான வீதியின் மத்தியைச் சந்திக்கும்வரை வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

வட்டார எல்லை விபரங்கள் இத்துடன் முடிவடைகின்றன

## சிந்தனைப்

# புரட்சி ஒன்று வேண்டும் என்கிறார் கோப்பாய் எம். பி.

கோப்பாய், வெள்ளி

'இந்நாட்டின் கல்வி, சமய சமூகப் பிரச்னைகள் யாவும் தீருவதற்கு மக்களனைவரும் ஒன்றுபட்டுச் சிந்தித்து செயலாற்றவேண்டும்'

இவ்வாறு கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையில் நடைபெற்ற பெற்றோர் தின விழாவில் கலந்து பேசுகையில்கோப்பாய் எம். பி. திரு. என். கதிரவேலுப்பிள்ளை கூறினார்.

இவ்விழா கோப்பாய் வட்டார வித்தியாதிகாரி திரு. வி சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

திரு. கதிரவேலுப்பிள்ளை மேலும் குறிப்பிட்டதாவது: "இன்று நம்மத்தியிலுள்ள பொருளாதாரப் பிரச்னை நீங்குவதற்கு தற்போதுள்ள கல்வித்திட்டத்தை ஏற்ற முறையில் மாற்றியமைத்து சிந்தனைப் புரட்சி மூலமாகவும், உபஉணவுற்பத்திமூலமாகவும் பொருளாதாரத்துக்கும் கல்விக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தலவசியம்.'

அடுத்து யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை பேசுகையில், "பாடசாலைகள் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டபின்னரே ஆசிரியர்கள் யாவரும் தேசத்துக்கும் சமயத்துக்கும் தொண்டாற்றும் சுதந்திரமுடையவர்களாக வாழமுடிகிறது எனவும் ஆசிரிய உலகம் இதனையுணர்ந்து சமய பக்தியுடனும், சேவைமனப்பான்மையுடனும், தன்னம்பிக்கை கொண்டவர்களாகவும் கடமையாற்றமுன்வர வேண்டும்" எனவும் கேட்டுக்கொண்டார்.

நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திரு. ஆர். கந்தையா, திரு. வி சுப்பிரமணியம் ஆகியோரும் உரைகளை வழங்கினர்.

மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## கொக்குவில்

# கி. ச. தலைவருக்கு கோரிக்கை

உடுவில், வெள்ளி

"காலஞ்சென்ற கோப்பாய் எம். பி. திரு. கு. வன்னியசிங்கம், தற்போதைய கொக்குவில் கிராமசபை உபதலைவர் திரு. த. அருணாசலம் உட்பட அநேகர் எமது கிராமத்துக்கு வரி அறவிடப்படவேண்டிய அவசியமில்லையென்றும் அறவிடப்படும் வரி விகிதம் அதிகம் என்றும் பல பொதுக்கூட்டங்கள் மூலமும், துண்டு-பிரசுரங்கள் மூலமும் தெரிவித்திருந்தனர். இதற்கிணங்க பல ஏழைகள் இன்றுவரை வரி கட்டாமல் இருக்கின்றனர். தாங்கள் இப்பொழுது அறவிடப்படும் வரியின் விகிதத்தைக் குறைப்பதோடு இன்றுவரை வரிகட்டாமல் இருப்போரின் வரிப்பணத்தை இல்லாமல் செய்யும் படியும் கேட்டுக்கொள்கிறோம்".

இவ்வித வேண்டுகோளை கொக்குவில் இளைஞர் சங்கமும், மஞ்சுளமணி சனசமூகநிலையமும், கொக்குவில் கிராமசபைத் தலைவருக்கு விடுத்துள்ளது.

# இன்று பரீட்சை

உடுவில், சனி

நாட்டின் சகல பாகங்களிலும் இருந்து புதிதாக மாணவ ஆசிரியர்களை தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சை இன்று ஆரம்பமாகின்றது. இப்பரீட்சை இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறும். இதற்கிடையே 1966ம் ஆண்டில் நடைபெற்ற மாணவ ஆசிரிய பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பரீட்சார்த்திகளில் சுமார் 4200 பேருக்கு விரைவில் நியமனங்கள் வழங்கவும் கல்வி இலாகா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

# ஸ்ரீ முன்னேஸ்வர ஆலய மஹோற்சவம்

சிலாபம், வெள்ளி

ஸ்ரீ முன்னேஸ்வர ஆலய மகோற்சவம் இம்மாதம் 10ந் தேதி ஆரம்பமாகிறது. அடுத்த மாதம் 5ந் தேதி தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 3—8—68

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் அல் 61 மீற்றர்

மாலை 6-30 நாதாஞ்சலி 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 இதிப்பாடல்கள், 7-30 குரல் வகை, 8-10 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீற்றர் அல் 49 மீற்றர்

மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துகள், 5-30 கானாஞ்சலி.

இரவு 6-15 வயலின், 6-45 சாவணம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 நினைவலைகள், 7-45 தொடர் நாடகம், 8-00 முஸ்லிம் [illegible] 8-30 [illegible] 9-15 [illegible] 10-15 தேர்ந்த இசை.

# 'நாட்டில் அமைதி ஏற்பட தலைவர்கள் வழிகாட்டவேண்டும்'

யாழ்ப்பாணம், சனி

'ஒரு நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும் நிலைபெறச் செய்யவேண்டுமாயின், அந்நாட்டின் தலைவர்கள் இன, மொழி, மத வேறுபாடு காணாதவர்களாய் இருக்கவேண்டும். அத்துடன் கட்சிவேறுபாடுகளில் ஒற்றுமை காணத்தக்கவர்களாகவும் இருத்தல் வேண்டும். இதனால் நாம் ஒரு குடும்பம் என்னும் உண்மை மெல்ல, மெல்ல வளர்ந்தோங்கும்'.

இவ்வாறு பூநகரி மறவகுறிச்சி ப. நோ. கூட்டுறவு சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசும்போது பூநகரி கிராமசபைத்தலைவர் திரு. வி. வல்லிபுரம் கூறினார்.

பூநகரி செல்வியாதிவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. வி. வல்லிபுரம் தொடர்ந்து பேசுகையில், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற அமுதவாக்கை நாம் நுணுகி, நுணுகி, உணர்வோமாயின் மக்களிடையே ஒழுக்கம், அறிவு, கல்வி, பொருளாதாரம் முதலியன வளர்ந்து நாடு முன்னேறும் என்பதில் ஐயமில்லை' என்றார்.

தலைமைக் காரியாலயப் பரிசோதகர் திரு. வி கனகரத்தினம், திரு. எஸ். யோகராசா ஆகியோரும் உரையாற்றினர்.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. எஸ். யோகராசா, உப தலைவர் திரு. கே. ஆறுமுகம், செயலாளர் திரு. எஸ். இராசரத்தினம்.

ஏழு பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. [நி.]

# கூட்டுறவு வளர்ச்சிக்கு முக்கியமானது எது? உதவி ஆணையாளர் கூறுகிறார்

இளையாணன், வெள்ளி

"நிர்வாகத் திறமையே கூட்டுறவு வளர்ச்சிக்கு மிக முக்கியம்." இவ்வாறு இளையாணன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வியாபார நிலையத் திறப்பு விழாவின் போது யாழ். கிழக்கு கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளரான திரு. வி. வைகுந்தசபை கூறினார்.

மேற்படி சங்கத் தலைவர் திரு. க தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் புதிய வியாபார நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில், 24 வருடகாலமாகச் சிறிய ஐக்கிய பண்டசாலையாக இருந்த சங்கம் இப்பொழுது இருக்கும் நிர்வாகிகளின் திறமையினால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாக மாற்றியமைக்கப்பட்டதுடன், லாபகரமாக முன்னேறிச் செல்வதையிட்டுத் தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

காரியாலயப் பரிசோதகர் திரு. வி. பாலசுந்தரம் பேசுகையில் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் சரிவரச்செய்து கொண்டுவந்தால் அவர்களுக்கு உரிமைகளும் தானாகவே வந்துகொண்டிருக்கும் அதனால் சங்கங்களும் வளர்ச்சியும் முன்னேற்றமடையும் என்றார்.

வட்டாரப் பரிசோதகர் திரு. ஏ. சி. அலோசியஸ் பேசுகையில் காலஞ்சென்ற கூட்டுறவு ஆணையாளர் திரு மதிபாலசிங்கத்தின் சேவை மறக்கமுடியாதது என்றார்.

பிரதம விருந்தினரான திரு. என். தேவராசன், பரிசோதகர்கள் திருவாளர்கள் கே. சுப்பிரமணியம், எஸ். ஆழ்வாப்பிள்ளை ஆகியோரும் பேசினார்கள். திரு. க. மாணிக்கம் நன்றி கூறினார்.

# குருபூசை

உரும்பராய், வெள்ளி

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய ஆசிரியர்களும், மாணவர்களும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசையை நேற்று சிறப்பாகக் கொண்டாடினர். ஆசிரியர்கள் வெள்ளைவாரணச் சருக்கத்தைப்பாடி உரை கூறினர். மாணவர்கள் சுவாமிகளின் சரிதையை இசையும் கதையுமாகவும் கும்மியாகவும் நடத்தினர். அன்னதானமும் வழங்கப்பட்டது.

# பிரதமரை சந்திப்பர்

## வெகுஜன இயக்கத் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், சனி

மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசம் சம்பந்தமான முழு விபரங்கள் மற்றும் பொலிஸ் அரசாங்க அதிபர் நடவடிக்கைகள் பற்றிய ஒரு மகஜரைத் தயாரித்து தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கக் குழு பிரதமரைப் பேட்டி கண்டு நிலைமையை விளக்குவதென்றும் சமூகக் குறைபாட்டு ஒழிப்புச் சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்க வற்புறுத்துவதென்றும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் பொதுச்சபை கூடி தீர்மானித்தது.

வடபகுதியில் உள்ள சகல சைவ ஆலயங்களும் ஹரிஜன மக்களுக்குத் திறந்துவிடப்படும்வரை ஆலயப் பிரவேசப் போராட்டத்தை தொடர்ந்து நடத்துவதென்றும், அதற்கான ஆயத்தங்களைச் செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது

இம்மாதம் 5ந் தேதி யாழ். நகர மண்டபத்தில் நடைபெறும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கக் கூட்டத்தில் தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்திற்கு ஆதரவு காட்டும் சகலரையும் அழைப்பதென்றும் அக்கூட்டத்தில் போராட்ட முடிவுகளை வெளியிடுவதென்றும் பொதுச்சபை முடிவுசெய்தது.

திரு. எம். சின்னையா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

# கொள்ளைலாபம் அடிக்கின்றனராம்

முல்லைத்தீவு, வெள்ளி

புதுக்குடியிருப்பு தேவிபுரம் என்னுமிடத்தில் வியாபாரிகள் சிலர் கொள்ளைலாபம் அடிக்கின்றனராம். ஒரு றாத்தல் சீனியை 80 சதத்திற்கும், ஒரு றாத்தல் மாவை 46 சதத்திற்கும் விற்கின்றனராம். கட்டுப்பாட்டுப் பொருட்களைக்கூட ஒவ்வொரு றாத்தலுக்கும் 5 30 சதம் கூட்டி விற்பனை செய்யப்படுவது பற்றி இப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்


அரசாங்கசேவைகள்
பொதுவேலைப்பகுதி

இல. 2077-சாவகச்சேரி மாவட்ட வைத்தியர் குடிமனையில் நீடிப்பு வேலைகள் செய்தல். கேள்விகள் முடிவு திகதி 28/8/68.

இதன் முழு விபரங்களுக்கும் 2/8/68 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1ம் பகுதி, 11ம் தொகுதியைப் பார்க்கவும்.

G.P. 6789

## பதவி-
## -மருத்துவ மாது-

யாழ்ப்பாண மாநகரசபை

மேற்படி பதவிக்கானவிண்ணப்பங்கள் யாழ்ப்பாண மாநகரசபை பதில் ஆணையாளரால் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களின் முடிவு திகதி 16-8-68 ஆகும்.

ஏனைய விபரங்களை யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வே. தங்கவேலு,
பதில் ஆணையாளர்,
யாழ்ப்பாணமாநகரசபை-
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
31-7-68. 909

## பகிரங்க அறிவித்தல்

தெல்லிப்பழைக் கிராமசபை
இறைவரி

தெல்லிப்பழைக் கிராமசபைக்கு 1962-ம் ஆண்டு தொடக்கம் இற்றைவரைக்கும் இறைவரி நிலுவை செலுத்தவேண்டியவர்கள் மேலும் காலதாமதமின்றி இறைவரி நிலுவையை தங்கள் இல்லங்களுக்கு வரும் இறைவரி சேகரிப்பாளரிடமோ அல்லது கிராமசபை அலுவலகத்திலோ செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன், இவ்வறிவித்தலுக்கு அமைய நடக்காதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என்பதை மிக மனவருத்தத்துடன் அறியத்தருகிறேன்.

ம. இரத்தினநாதன்,
தலைவர்.
கிராமசபை அலுவலகம்.
தெல்லிப்பழை,
29-7-68. 907



இன்று முதல் 6-8-68 வரை
மாணிப்பாய்
வெலிலி
தினசரி 6-30 9-30 மணிக்கு
சிவாஜி கணேசன்
சரோஜாதேவி
எம். ஆர். ராதா
எம். என். நம்பியார்
நடித்த

பாகப்பிரிவினை



இப்பொழுது மக்கள் ஆதரவுடன்
வீறுநடை போடுகிறேன்

நான்

பிளாஸா (கொழும்பு) | மைலன் (கொழும்பு) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
கிங்ஸ்லி (கொழும்பு) | விஜயா (மட்டுநகர்) | ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)

★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
மனோரமா-நாகேஷ்-முத்துராமன்
பேபி பத்மினி-மனோகர்
நடித்த

ஸ்ரீ விநாயகா பிக்சர்ஸ் நான்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

கெபிட்டல்
(கொழும்பு)

★ ராஜ்கபூர்
★ ராஜேந்திரகுமார்
★ வைஜயந்திமாலா
நடித்த

சங்கம்
(டெக்னிக் கலர்)


# அரியாலை கோஷ்டி பொலிஸ் கோஷ்டியை வென்றது

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பொலிஸ் கோஷ்டிக்கும், அரியாலை விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் கோட்டைமைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில் அரியாலைக் கோஷ்டி வெற்றிபெற்றது.

இப்போட்டியின் ஆரம்பத்திலிருந்து இடைவேளைவரை பொலிஸ் கோஷ்டியினரின் விளையாட்டு மிகவும் திறமையாகவே காணப்பட்டது. இடைவேளைக்கு 10 நிமிஷங்கள் இருக்கும்போது பொலிஸ் கோஷ்டியின் இடதுமுன்னணிவீரர் இன்னி பெக்டர் டகன், பெனல்ட்டி மூலம் முதலாவது கோலைப் போட்டார்.

இடைவேளையின்பின் அரியாலைக்கோஷ்டியின் முன்னணி வீரர்களின் விளையாட்டில் ஏற்பட்ட முன்னேற்றத்தை பொலிஸ் கோஷ்டியின் பின்னணி வீரர்களால் தடுத்துநிறுத்தமுடியவில்லை. இதனால் அரியாலைக்கோஷ்டியினர் அடுத்தடுத்து மூன்று கோல்களைப் போட்டனர். பொலிஸ் கோஷ்டியின் மத்திய முன்னணிவீரர் அன்வரின் விளையாட்டு மிகவும் திறமையாக இருந்தது. ஆட்ட முடிவில் அரியாலைக் கோஷ்டி பொலிஸ் கோஷ்டியை 3—1 கோல்களால் தோற்கடித்தது. (நே. நி

# 'விவசாயியின் குடும்பம் இன்று சௌக்கியமாக வாழுகிறது'

## உதவி அரசாங்க அதிபர் கூறுகிறார்

வட்டுக்கோட்டை, சனி

"அரசாங்க உத்தியோகத்துக்கோ, வர்த்தகத்துறைக்கோ இருக்கும் மதிப்பைவிட இன்று விவசாயிகளுக்கு மதிப்பு உயர்ந்துள்ளது. விவசாயியும் அவரது குடும்பமும் இன்று சௌக்கியமாக வாழ்கிறார்கள். வரட்சியான பிரதேசங்களெல்லாம் வளமான பிரதேசங்களாக ஆக்கப்பட்டுள்ளதும் ஆக்கப்படுவதும் விவசாயியின் உழைப்பால்தான். நமது நாட்டில் இன்று விவசாயியின் மதிப்பு உயர்ந்துவிட்டது. இந்த விதத்தில் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துள்ளது'

இவ்வாறு வட்டுக்கோட்டை கிழக்கு மகளிர் முன்னேற்ற சங்க மண்டபத்தில் நடைபெற்ற கிராமாபிவிருத்திக் கருத்தரங்கில் 'உணவு உற்பத்தி' எனும் விஷயம்பற்றி உரை நிகழ்த்திய யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. சி. முருகேசம்பிள்ளை கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இப்போது விவசாயிகளுக்குப் பெரும் சீதனம் கொடுத்துத் தமது பிள்ளைகளை மணம் செய்து வைக்கப் பலர் விரும்புகிறார்கள். இது விவசாயியின் நிலை உயர்ந்துவிட்டதையே காட்டுகின்றது.

அவர் தமது பேச்சின் இறுதியில் வலிகாமம் மேற்குப் பகுதிகளில் ஆறுமாதத்துக்கு நெல்லையும், நெல் அறுவடைமுடிந்த மூன்றுமாதங்கள் பாசிப்பயறையும் அடுத்த மூன்று மாதங்கள் நிலக்கடலையையும் உற்பத்தி செய்து பெரும் பயனடையலாம் என்றார்.

### சுகமான வாழ்வு வாழ

மானிப்பாய் சுகாதாரப் பகுதி வைத்தியஅதிகாரி பேசுகையில் சந்தோஷமான குடும்பவாழ்க்கை வாழ திட்டமிட்ட குடும்பம் அவசியம் என்றும் கர்ப்பத்தடை விதிகளை அனுசரித்து நடந்தால் வாழ்வு சுகமாக அமையும் என்றும் கூறினார்.

### திட்டமிட்டு செயலாற்றுதல்

எந்த விஷயத்தையும் திட்டமிட்டு செய்தால் வெற்றிபெறமுடியும் என்று 'சமூக முன்னேற்றக் கொள்கைகள்' என்னும் விஷயம் பற்றி உரையாற்றிய அச்சுவேலி கிராமமுன்னேற்றப் பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. இராமச்சந்திரன் குறிப்பிட்டார்.

### மதிப்பு கொடுக்கவேண்டும்

'உழவனுக்கு நாம் நல்ல மதிப்பு கொடுக்கவேண்டும்' என கருத்தரங்குக்குத் தலைமைதாங்கிய வலிகாமம் மேற்கு காரியாதிகாரி திரு. ந. மாணிக்க நடராசா கூறினார்.

இக்கருத்தரங்கில் வேறு பலரும் கலந்து வலமொருவர்களின் கருத்துப் பரிமாறினர்.


3வது வாரம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
ரகுநாதன் - சந்திரகலா
தங்கவடிவேல்
நடித்த
நிர்மலா

வின்ஸர்
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
பி. சரோஜாதேவி
நடித்த
அரச கட்டளை

2வது மாதம்!
ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நாகேஷ் — விஜயநிர்மலா
நடித்த
பணமா பாசமா

MANOHARA
JAFFNA
Daily at 10-30, 4-45, 7-00&9-45 p. m.
Frank Sinatra, Dean Martin & Bing Crosby
in
ROBBIN & THE 7 HOODS
[Colour-Scope]

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P M.
Anthony Quinn
James Coburn
in
A HIGH WIND IN JAMAICA
(in Colour)


## சின்ன மடு மாதா திருநாள்

ஊர்காவற்றுறை, வெள்ளி

சின்னமடு செபமாலைமாதா கோவிலின் 8-ம் திருநாளான இன்று காலையில் திவ்விய பலி பூசையும், மாலை 7-30 மணிக்கு செபமாலை, தேவமாதா பிரார்த்தனை, எழுந்தேற்றம், ஆசீர்வாதம் நடைபெறும்.

நாளை இரவு விசேஷ ஆராதனைகளைத் தொடர்ந்து திவ்விய பலிபூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

# வரி விளம்பரம்


## விற்பனைக்கு

கார்!
EY 2784, A.40 ஓடக்கூடிய நல்லநிலையில் உள்ளது.
CY 8900 கில்மன் ஓடக்கூடிய நல்லநிலையில் இருக்கிறது. 30நம்பர் பிண்டலைப்டடியில் பொட்டது. மு. இராசரத்தினம், சன்னதி ரோட், அச்சுவேலி. 1289

## கல்வி

மெக்கானிக் பாடங்கள்!

செப்டம்பர் மாதம் ஆரம்பமாகவிருக்கும் எமது ஐந்தாவது மோட்டார் டிராக்டர் டீசல் முழுநேர பயிற்சி வகுப்புகளுக்கும் துரித சாரதிப் பயிற்சிகளுக்கும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சேர விரும்புவோர் உடன் விண்ணப்பிக்கவும். அன்றி நேரில் தொடர்புகொள்ளவும். அதிபர், ஸ்ரீராஜ் ஓட்டோமொபைல் எஞ்ஜினியரிங் நிறுவனம், மொகிசாக் மாளிகை மேல்மாடி, 11/A & 11/B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1274

## தேவை

பேக்கர்!

பாண், பணிஸ், விஸ்கட், கேக் முதலியன தயாரிக்கத் தெரிந்த பேக்கர், வேலைக்கு உடனடியாக வேண்டும். விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். மு. இராசரத்தினம், இலட்சுமி பேக்கரி, சன்னதிரோட், அச்சுவேலி. 1288

ஓடர் எடுக்கவும் வீட்டிற்கு வீடு வியாபாரம் செய்யவும் ஆண், பெண் தேவை. ருவல்பரல், சங்கரப்பிள்ளைவீதி, மானிப்பாய். 1290


## வீதி படு மோசம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறை- கரம்பன் வீதி படுமோசமான நிலையிலிருப்பதால் போக்குவரத்துச் செய்யும் மோட்டார் வாகனங்கள் பெருத்த அவதிக்குள்ளாகவேண்டியுள்ளது. இ. போ. ச பஸ்கள் அதிகமாக சேவை செய்யும் இவ்வீதியில் பஸ் செல்கையில் வேறொரு மோட்டார் வாகனத்தை விலத்திச் செல்லமுடியாத நிலையில் இவ்வீதியுள்ளது.

## ஆலய நிர்வாகம்

யாழ்ப்பாணம், சனி

"அடியார்கள் வழிபாட்டுக்குரிய முறையில் ஆலய நிர்வாகங்கள் அமையவேண்டும். சமயக்கல்வியையும் அறிவையும் வளர்க்கக்கூடிய முறையில் உபந்நியாசங்கள் கோவிலில் இடம்பெற வேண்டும்."

இவ்வாறு சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி சாந்தைபர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். கூட்டத்தில் இளநெறிக்காவலர் திரு. த. முத்துசாமிப்பிள்ளை மரணத்துக்கு அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம், சனி

காரைநகர் கிழக்கு அமெரிக்கன்மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் மேல்வகுப்பு மாணவர்களும் ஆசிரியர்களும் அனுராதபுரத்திற்கு சரித்திர புவியியல் சம்பந்தமான சுற்றுப்பிரயாணமொன்றை மேற்கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிங்கள மக்களுக்கென ஒரு குடியேற்றத்திட்டம்

## நாவற்குளியில் நிறுவப்படும்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்டத்தில் சிங்கள மக்களுக்கான குடியேற்றத்திட்டமொன்று விரைவில் நிறுவப்படவிருக்கின்றது. இதற்கான நடவடிக்கைகளை அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகர மேற்கொண்டுள்ளார்.

அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்த வீடமைப்புத்திட்ட அமைச்சர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தன உத்தியோக பூர்வமாக விஜயஞ் செய்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் இவ்வருடத்திலேயே அமுலுக்குக்கொண்டு வரப்படும் எனத் தெரிகின்றது.

இத்திட்டத்திற்கான காணி நாவற்குளிக்கு அண்மையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இதன்முதலாவது திட்டத்தில் சுமார் 500 சிங்கள மக்கள் குடியேற்றப்படலாம். (கா. நி.)

# தேவையானவர்களுக்கு கிடைப்பதில்லை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்திலுள்ள 'கல்ஸல்'வில் பொதுமக்கள் தமக்குத் தேவையான சில பொருட்களைப் பெறமுடியவில்லையெனவும் வெளியில் தட்டுப்பாடான பொருள்கள் இங்கு முன் கிடைத்து வந்ததாகவும் இப்போது அவற்றை சில்லறையாக வாங்க முடியாதிருப்பதாகவும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் இவ்வித கஷ்டத்தைநீக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யு. தஹநாயக்காவிடம் தந்தி மூலம்கேட்டுள்ளார்.

சில்லறையாகப் பொருள்களை இலகுவில் மலிவாகப் பொதுமக்கள்வாங்குவதற்கு வழிவகுக்குமுகமாகவே ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸ்தாபனத்தில் வேஷ்டி மற்றும் உள்ளூர்த்துணிகள் இன்னும் தேவையான பொருள்களை சில்லறையாகப் பெற விரும்புவோர் அவ்விதம் பெறமுடியாமலிருப்பதாகவும் குறிப்பிட்ட சில மொத்த வியாபாரிகளுக்கே இப்பொருட்கள் மொத்தமாகக்கிடைப்பதாகவும் தெரிகிறது. இவ்வித நிலையால் சாதாரண பொதுமக்கள் தமது தேவைகளை இந்தநிலையத்தின்மூலம் பூர்த்திசெய்ய முடியாமலிருப்பதாகக்குறை தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசாங்கத்திலிருந்து தமிழரசு வெளியேறுவதற்கு காரணம்

## பொதுச் செயலாளர் விளக்கம்

உடுவில், வெள்ளி

"இராமங்கள் முன்னேற வேண்டுமானால் பொதுமக்களின்ஒத்துழைப்பும் அரசாங்க உதவியும் நிச்சயம் கிடைக்க வேண்டும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள நாம் எந்தக் காரணத்தை முன்வைத்தும் அரசாங்கத்துடன் பகைத்துக்கொள்ளுதல் நல்லதல்ல. இன்றைய நிலையில் எம்மை அரசாங்கத்தை விட்டு வெளியேறுமாறு இவர் கூறுவது தவறானதே படுகிறது. பொறுமையையும், திராணத்தையும்கடைப்பிடித்து இந்தித்து செயலாற்றுவதே சிறந்தது. அரசாங்கத்துடன் சேர்ந்திருந்து தான் எமது உரிமைகளை நாம் பெறவேண்டும்"

இனுவிலில் நடைபெற்ற ஒரு வரவேற்புக்கூட்டத்தில் பேசிய தமிழரசுக் கட்சிப் பொதுச்செயலாளரும் வட்டுக்கோட்டை எம். பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் கிராம சபைத் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்ட திரு. எஸ். முத்துலிங்கத்திற்கும் ஏனைய பதினொரு உறுப்பினர்களுக்கும் இனுவில் வாசிகசாலை பொதுவரவேற்பு அளிக்கப்பட்டது. திரு. கே. நடராசா இக்கூட்டத்துக்கு தலைமைவகித்தார்.

இனுவில் ஸ்ரீ சிவகாமசுந்தரி சன சமூக நிலைய முன்றலில் நடைபெற்ற இவ்வரவேற்புக்கூட்டத்தில் திரு. வ. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:

ஓர் உள்ளூராட்சி மன்றத்தின் முன்னேற்றம் பொதுமக்களுடைய ஒத்துழைப்பின்றி இயங்கமுடியாதென்பது யாவரும் அறிந்த உண்மை. இன்று தமிழினம் தாழ்வுற்று விடுதலையற்று தவிக்கின்றது. எமது இனத்தை முன்னேற்ற இன ஒற்றுமை அவசியம் ஏற்படவேண்டும். சாதி, சமய, இன பாகுபாடற்ற ஒரு சமுதாய அமைப்பின் தொழில் வசதியை பெருக்கி தமிழினம் உயர நாம் அயராது உழைக்கவேண்டும்.

யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை, உடுவில் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம், திரு. வ. நடராசா உட்பட பலர் பேசினர்.

திரு. எஸ். முத்துலிங்கமும் ஏனைய உறுப்பினர்களும் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பிற்கு நன்றி தெரிவித்தனர். கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# கடலில் சென்ற நால்வரைக் காணவில்லை

நல்லூர், சனி

பருத்தித்துறையிலிருந்து இயந்திரப் படகொன்றில் கடலில் மீன் பிடிக்கச் சென்ற ராசையா. சின்னையா, அந்தோனிப்பிள்ளை தம்பிராஜா ஆகிய நால்வரையும் கடந்த மூன்று தினங்களாகக் காணவில்லையென பொலிசாரிடம் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து இவர்களைத் தேடும் முயற்சியில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கடற்படையினரும் இவர்களுடன் அறிந்த உதவிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

[illegible] தேடுதலில் ஈடுபட்டுள்ளனர் [illegible] இப்போது [illegible] வண்ணமிருக்கின்றனர்.

# முல்லைத்தீவு காரியாதிகாரியின் முயற்சி

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு கோயில் குடியிருப்பையும்— சின்னாற்றின் கரையையும் இணைக்கும் அணைக்கட்டினால் பாடசாலைப் பிள்ளைகளுக்கும், பொதுமக்களுக்கும் பெரும் ஆபத்தாயிருப்பதால் இந்த அணைக்கட்டை விஸ்தரிக்கும் பொருட்டு முல்லைத்தீவுக் காரியாதிகாரி திரு. சொர்ணசேனநாதன் தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளார்.

இதன் முதல் நடவடிக்கையாக அவர் பொதுமக்களை அழைத்து இந்த அணைக்கட்டைச் சிரமதானம் மூலம் விஸ்தரிக்க முன்வருமாறும், பண உதவி புரியும்படியும் கேட்டுக்கொண்டார். இதனைதொட்டிப் பல பிரமுகர்கள் பணம் உதவ முன்வந்துள்ளனர். சிரமதானம் இம்மாதம் 11-ந்திகதி நடைபெறவிருக்கிறது. சிரமதானத்திலும், கல்நாட்டு வைபவத்திலும் வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம், வவுனியா அரசாங்க அதிபர் திரு. பி. வி. பெரேராவும் கலந்துகொள்வார்கள்.

## முல்லைத்தீவு

### மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப்போட்டி

முல்லைத்தீவு, வியா.

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தின் இல்லங்களுக்கான விளையாட்டுப்போட்டி முல்லைத்தீவு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

ஞானம்இல்லம் 212 1/2ப் புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைக் கைப்பற்றியது. இரண்டாவது இடத்தை விவேகா இல்லமும் மூன்றாவது இடத்தை மைக்கல் இல்லமும் பெற்றுக்கொண்டன. பிரதம விருந்தினராக வவுனியா பிரதம கல்வி அதிகாரி திரு. . சந்திரசேகரம்பிள்ளை கலந்து வெற்றிபெற்றோருக்குப் பரிசில்களை வழங்கினார்.

## மஹா கும்பாபிஷேகம்

கம்பளை, வெள்ளி

கம்பளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி மஹாகும்பாபிஷேகம் இம்மாதம் 28ந் தேதி நடைபெறவிருக்கின்றது.

## உருவப்படம் திரைநீக்கம்

உடுவில், வெள்ளி

அண்மையில் காலஞ்சென்ற கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. எம். மயிலாலிங்கத்தின் உருவப்படம் யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் இம்மாதம் 5-ம் திகதி மாலையில் திரைநீக்கம் செய்துவைக்கப்படும். கூட்டுறவுத்துறை ஆக்கஆணையாளர் திரு. டபிள்யு பத்திராஜா திரைநீக்கம் செய்துவைப்பார்.

## பெருமைக்குரிய விஷயம்

பேராதனை, வெள்ளி

'நாடெங்கும் ஒழுக்கயீனம் தலைதூக்கி தாண்டவமாடும் இச்சமயத்தில் நமது நீதிமன்றங்களிலாவது ஒழுக்கம் நிலையூன்றியிருப்பது பெருமைக்குரிய விஷயம்.'

நீதி சேவையிலிருந்து ஓய்வுபெறப்போகும் நீதியரசர் திரு. டீ. எஸ். பெர்னாண்டோ கண்டி அசைஸ் கோர்ட் முடிவில் இவ்வாறு கூறினார்.

# டாக்டராக வரமுடியவில்லை; வாலிபர் தற்கொலை

காங்கேசன்துறை, வெள்.

டாக்டராக வரமுடியவில்லையே என்று கவலை கொண்டிருந்த மிருகஇயல் சிறப்பு பட்டதாரியான ஓர் இளைஞன் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

குரும்பசிட்டியைச் சேர்ந்த இராமலிங்கம் ஜெயராமன் என்ற இந்த இளைஞனின் மரணம் சம்பந்தமாக காங்கேசன்துறைப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. அ. குமரகுரு விசாரணை நடத்தினார்,

காலஞ்சென்ற ஜெயராமனின் தாயார் திருமதி நல்லம்மா இராமலிங்கம் சாட்சியமளிக்கையில் இதற்கு முன்னரும் இரண்டு தடவை இப்படி அவர் தற்கொலை முயற்சி செய்ததாகத் தெரிவித்தார். தாம் ஒரு டாக்டராக வரமுடியவில்லையே என்று அவர் மனவேதனையடைந்திருந்ததாகவும் தாயார் தெரிவித்தார்.

இறந்தவர் கடுமையான மனநோயினால் பாதிக்கப்பட்டிருந்தாரென்றும் இவர் போன்றவர்கள் பெரும்பாலும் தற்கொலையையே நாடுவார்களென்றும் மனநோய் வைத்திய நிபுணர் டாக்டர் அருளம்பலம் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

பிரேத பரிசோதனை செய்த டாக்டர் மாணிக்கம் நச்சுத்திராவகமருந்தியதால் ஏற்பட்ட மரணம் எனத் தெரிவித்தார். விசாரணை முடிவில் தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

# வடக்கில் கொலை; களவு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியில் மட்டும் இவ்வருடத்தில் நேற்றுவரை மொத்தம் 30 கொலைகள் நடைபெற்றுள்ளன. இதுதவிர 2000 ரூபாவுக்கு மேற்பட்ட களவுகள் 29 நடைபெற்றுள்ளன. 30 கொலைகளில் இரு கொலைகளுக்கான எதிரிகள் இன்னமும் கைதுசெய்யப்படவில்லை. 29 களவுகளில் 17 களவுகளுக்கும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. இவ்விபரங்கள் பொலிஸாரின் புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

வடபகுதி பொலிஸ் அதிபரின் நிர்வாகத்தின்கீழுள்ள 15 பொலிஸ் நிலையங்களிலும் கடந்த 7 மாதங்களில் நடைபெற்ற 30 கொலைகளிலும் 16 கொலைகள் மட்டும் காங்கேசன்துறை பொலிஸ் பகுதியில் நடைபெற்றுள்ளன. 30 கொலைகளில் 7 கொலைகள் சாதிக் கலவரங்களினால் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

28 கொலைகளுக்கான சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும், இரு கொலைகளுக்கான எதிரிகள் இன்னமும் கைதுசெய்யப்படவில்லையென்றும் பொலிஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொடிகாமத்தில் சாதிக் கலவரத்தில் நடைபெற்ற ஒரு கொலைக்கும், சாவகச்சேரியில் நடைபெற்ற மற்றொரு கொலைக்குமே இன்னும் எதிரிகள் கைதுசெய்யப்படவில்லை.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட 28 கொலை வழக்குகளில் சில எதிரிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சில வழக்குகள் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இப்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சில வழக்குகள் சுப்ரீம் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

நடைபெற்ற 30 கொலைகளுக்குள்ளும் அண்மையில் மாங்குளத்தில் நடைபெற்ற முக்கொலையே மிகவும் முக்கியமானதாக பொலிஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கொலைகளுக்கு கூடுதலாக துப்பாக்கியும் கத்தியுமே பாவிக்கப்பட்டுள்ளனவாம்.

இக்கொலைகளை தடைசெய்வதற்கான சில நடவடிக்கைகள் பற்றி இப்போது பொலிஸ் தலைமைக் காரியாலயம் தீவிரமாக ஆலோசனை செய்து வருகின்றது. குடியேற்றத் திட்டங்களுக்குப் பாவிக்க வழங்கிய துப்பாக்கிகள் கொலைக்கும் பாவிக்கப்பட்டு வருவதாகக் கிடைத்த இரகசியத் தகவல்களைக்கொண்டு பொலிஸ் ஆணையாளர் நடைமுறையில் வானங்களைப் பரிசோதிப்பதில் கூடிய கவனத்தை மேற்கொண்டுள்ளனர்.

அரசாங்கம் வழங்கிய துப்பாக்கிகளை இவ்வாறான தேவைகளுக்கு யாராவது பாவிப்பது பற்றிய தகவல் கிடைத்தால் அவர்களது துப்பாக்கிகளை செல்லாத பொலிசாரின் அனுமதியுடன் அரசாங்க அதிபர் மூலம் ரத்துச் செய்யும் நடவடிக்கைகளையும் பொலிஸ் தலைமை காரியாலயம் மேற்கொள்ளும் எனத் தெரிய வந்துள்ளது.

இதுதவிர வடபகுதியில் நடைபெற்ற 29 களவுகளில் 18 களவுகளுக்கான சந்தேக நபர்கள் இன்னமும் கைது செய்யப்படவில்லை. நடைபெற்ற களவுகளில் அதிகமானவையும் வீடு உடைத்து நகைகளே களவாடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கா. நி)

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து இன்று மாலை பஜனைக்குழுவொன்று புறப்பட்டு பாதயாத்திரையாகஇம்மாதம் 8-ம் திகதி கதிர்காமத் தீர்த்தத்திருவிழாவன்றுதிருக்கோவிலைச் சென்றுசேரும்.

## சுவீப் முடிவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 28 Z 0758 | 57 J 0665 |
| 42 Q 0542 | 03 X 0575 |
| 36 E 0116 | 32 B 0835 |
| 48 K 0307 | 19 U 0980 |
| 26 U 0248 | 55 M 0250 |
| 38 E 0898 | 28 R 0196 |
| 02 T 0725 | 22 C 0957 |
| 33 H 0346 | 07 Y 0556 |
| 18 L 0671 | 12 K 0631 |
| 48 J 0985 | 51 L 0262 |
| 28 S 0726 | 52 S 0194 |
| 41 L 0280 | 54 K 0575 |
| 39 Y 0629 | 01 G 0154 |
| 20 O 0989 | 57 R 0775 |
| 31 A 0741 | 22 R 0699 |
| 14 D 0243 | 12 F 0766 |
| 40 G 0123 | 15 G 0962 |
| 25 K 0230 | 28 T 0777 |
| 06 C 0076 | 32 D 0936 |
| 19 Y 0700 | 28 B 0089 |
| 51 A 0435 | 28 Z 0848 |
| 55 S 0898 | 29 C 0655 |
| 44 M 0015 | 04 J 0648 |
| 34 Y 0899 | 31 R 0475 |
| 11 D 0269 | 24 E 0599 |
| 32 S 0243 | 18 J 0165 |
| 49 V 0052 | 29 C 0922 |
| 46 N 0332 | 37 E 0922 |

19 E 0930

52 Y 0975 (இந்த இலக்கம் 57 X 0975 ஆகவும் இருக்கலாம்).

(இதை உறுதிப்படுத்தப்படவேண்டும்.)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org